JL
Y5926.Vm24,N
N29. 2.11
220501

# வேளாள மித்திரன்.

# "VELALA MITRAN."

ஓர் அரிய மாத இதழ்.

மாசி-பங்குனி இதழ் 11-12.

OF THE
25 JUN 1930

வாளர் கண் செந்துவர் வாய் மாமலையான் றன்மடந்தை
தோளாகம் பாக மாய்ப் புல்கினான் றொல் கோயில்
வேளாள ரென்றவர்கள் வள்ளன்மை யான் மிக்கிருக்குந்
தாளாள ராக் கூறிற்றான் றோன்றி மாடமே.

(திருஞான சம்பந்தர்).

"வேள்ளாள மித்திரன்" ஆபீஸ்,
மதுக்கரை போஸ்ட்
(Via) போத்தனூர் (கோவை

## பொருளடக்கம்.

# வேளாள மித்திரன்.


1. திருக்குறளும் கடவுள் உண்மையும். 247
2. வித்யானந்த வெளியீடு. 252
3. இராஜப் பிரதிநிதியின் விடை. 261
4. போர்துவக்கம். 262
5, எனது சாவகாசவேளை. 265


---

## சந்தாதாரருக்கோர் அறிக்கை.

வேளாளச் செல்வரே!

நவீன சாதனங்களால் உலகம் மிக நெருங்கப் பிணிக்கப் பட்டுள்ள இக்காலத்தில், உலக விஷயங்களை அறிய வேண்டிய அவசியத்தையும், அவை உணர்த்த வெழும் பத்திரிகைகளுக்கு ஏற்படும் நித்ய கண்ட, கஷ்ட நஷ்டங்களையும் தாங்கள் அறியாததல்லை. பொருளீட்ட, பிழைப்புகளைக் கருதி யன்று; தேச, சமூக, சமய தொண்டாற்றுதற் கெனவே "மித்திரனை" ஆரம்பித்தோம். கடந்த 2 வருடங்களாக நேர்ந்த பெரும் பொருள் நஷ்டத்தையும் பொருட் படுத்ாது, இனியேனும் நமது மரபினர் ஆதரிப்பா ரேன்ற நம்பிக்கையுடன், நடத்தி வருகிறோம். நமது சமூகப் பத்திரிகையை நமது மக்களே இன்னும் ஆதரிக்க முனையா விடின், வெறெவரிடம் முறையிடுவது? எவர் ஆதரிப்பார்? பல வேறு வழிகளில் விரயமாகும் திரண்ட பொருளின் ஓர் சிறு பகுதியை இதன் வருட சந்தாவாகச் செலுத்தி, ஊக்க மளிப்பின் அது, தேச, சமய, சமூகத் தொண்டாகாதா? வேளாள வள்ளல்களே! மித்திரனை ஆதரியுங்கள். உண்மையுணரும் நன்மக்களுக்கு நீண்ட விண்ணப்ப மெதற்கு? இவ்வாண்டு சந்தாத் துகையை இம்மாத முடிவிற்குள் செலுத்தாதாருக்கு, சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப் படும். வேண்டாதார் அதற்கு முன்னரே தெரிவித்து விடுதல் நலம். வி. பி. யைத் திருப்பி அனுப்புவதால் நமக்கு அதிக நஷ்ட முண்டாவதால் வேளாள நன்மரபினர்க்கு நாகாது. நன்றே செய்மின் இன்றே செய்மின்.

25 JUN 1930

உ

சிவமயம்

# வேளாள மித்திரன்.

உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

மலர் 2 | சுக்கில-௵ மாசி-௴ 1930-௵ பிப்ரவரி-மார்ச்சு௴. | இதழ் 11

## திருக்குறளும் கடவுள் உண்மையும்.

(பொன்மார் நடேச முதலியார்.)

(தமிழ் பண்டிதர், நேடிவ் ஹைஸ்கூல், செங்கற்பட்டு)

தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவனாரியற்றிய திருக்குறள் கல்விநலங்கனிந்த எந்நாட்டுப் புலவர்களும் இச்சையோடு உச்சி மேற்கொள்ளும் உயர் தகுதி வாய்ந்த பொது நீதிகள் பொதிந்துள்ள ஓர் பெரு நூலென்பது வெளிப்படை. அன்றியும் அஃது எம்மதத்தினரும் தத்தமக்குரியதெனப் போற்றற்பாலதாகிய உள்ளுறைப் பொருள் ததும்பியுள்ளது. எனினும், அது கடவுளுண்மையை மறுத்துரைப்போர்க்கேனும், வழிபடும் முறை, இந்து மத சமூகப் பொதுக் கொள்கை, பண்டைய தெய்வீக நூற்றுணிபு முதலியவற்றை இகழ்ந்துரைப்பார்க்கேனும் சாதகமாகாது. எங்ஙனமெனின் கூறுதும்:---எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் ஒருவன் உண்டென்பது சகல தேசத்தார்க்கும், பல்வேறு கொள்கையுடைய நவீன ஆராய்ச்சியுடையாரில் பெரும்பாலார்க்கும் உடன்பாடே. ஆனால் கடவுள் ஒருவன் உண்டென்று கொள்ள வேண்டுவதில்லை யென்று கூறுவோர் எக்காலத்திலும் இல்லாமற் போகவில்லை. இது பண்டைக் காலந் தொடங்கியே நேர்ந்துள்ள கொள்கையே. கடவுள் உண்மையை மறுத்துப் பேசும் முகத்தானே அதனை நிலைநாட்டி வேரூன்றச் செய்ய வேண்டுமென்னும் நல்லெண்ணத்தாலோ, வேறெக்காரணத்தைப் பற்றியோ ஒரு சிலர் அக்கொள்கையைக் கைப்பிடி வந்[illegible] [illegible]ச்சாஸ்திர நூல்களால் அறியக்கிடக்கிறது. ஆயினும் [illegible]

செய்கை கடவுள் நம்பிக்கையுடையார்க்கு நன்மையே பயந்தது. அவர்கள் அங்ஙனம் கூற முன்வராதிருப்பின், கடவுள் இருப்பை நிலைநாட்டும் ஆதார விளக்கங்கள் அக்காலத்து மேதாவிகளால் விளக்கப் படாமற் போயிருக்கும். அக்காலத்து ஆன்றோர் அமைத்து வைத்த அரும்பெரும் தெளிவுரைகளே இக்காலத்தில் தோன்றும் நாஸ்திகக் கொள்கையை மறுத்து, ஆஸ்திகக்கொள்கையை நிலை நாட்டுவதற்கு முக்கிய ஆதாரங்களாய் விளங்குகின்றன. அந்நாஸ்திகக் கொள்கைதான் அலைகடல்சூழ் நிலப்பரப்பில் எவ்வளவு தூரம் நிலைத்துள்ளது? பேருலகிற் பெருகவாழும் மன்பதைக் கூட்டத்துள் இலக்கத்தில் ஒருவர் வீதமேனும் கையாளுகிறார்களென்று நாட்டல் கூடுமோ? கூடாதன்றோ? மனிதனாலும் நினைத்தற்கரிய அபூர்வ செய்கை புரியும் சகல கலை வல்ல மேனாட்டார் முதலியோரும் கடவுள் உண்மையில் நம்பிக்கையுடையாரெனின் அதன் ஏற்றத்தைக் கூறலும் வேண்டுமோ? அதன் சர்வ வியாபகத் தன்மையை மறுக்கவுங் கூடுமோ?

இது இவ்வாறாக, அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலையும் மூதறிஞர் பலரும் போற்றும் வண்ணம் பிரித்துப் பிரித்து நுணுகியாராய்ந்து, ஔவை நூலாரும், இலக்கண நூலாரும், பொருள் நூலாரும் புகழ்ந்துரைக்குமாறு எப்பொருளும் செறிந்து விளங்க நூலியற்றிய பொய்யாமொழிப் புலவராம் ஆராய்ச்சியில் வல்ல நந்தம் வள்ளுவனார் கொள்கை யாதாமென்று ஆராய்வோம். உலகத்துள்ள புலவர் பலரும் தாம் எடுத்துக் கொண்ட காரியம் இனிது முடிதற் பொருட்டு இரண்டொரு கவிகளாலேயே கடவுளைத் துதிப்பார்கள். வேறு சிலர் தாம் வழிபடும் கடவுளின் பல்வேறு நாமரூபங்களைக் குறித்துத் தனித்தனி துதிக்கவி இயற்றுவர். இயற்கை யறிவிலும் ஆராய்ச்சி முறையிலும் துறைபோய நம் நாயனாரோ தம் நூல் இனிது முடிதற் பொருட்டு ஒரு அதிகாரம் முற்றிலுமே கடவுள் வாழ்த்துக் கூறியுள்ளார். கடவுள் வாழ்த்துக் கூற வந்த புலவர் பெருமானும் பதி இலக்கணம், பசு இலக்கணம், பாச இலக்கணம், பதியையடையும் மார்க்கம் முதலிய சீரிய மதக்கொள்கைகள் பலவற்றையும் தொகுத்துக் கூறியுள்ளாரெனின், அவர்க்குக் கடவுள் நம்பிக்கையில்லையென்று கூறுதல் யாரால் இயலும்? ஆயினும் [illegible] காலத்தும் கடவுள் உண்மையை மறுத்துரைப்போர் இரு[illegible]ரெனவே [illegible] வேண்டியிருக்கிறது. இல்லையாயின்

920501



முதற் குறளிலேயே கடவுள் உண்மையை நிலை நாட்ட வேண்டிய அவசியமிராது. "அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றேயுலகு" என்னும் ஓர் சிறிய குறட்பாவில் அவர் அமைத்துப் போந்த ஆழ்ந்த நுண்ணிய செம்பொருள் நுணுகியாராயும் போறி வாளர் மனதில் பெரிதும் மகிழ்ச்சியை யூட்டுமென்பது மிகையாகாது. காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுட்கு அனுமான அளவையால் உண்மை கூறிப் போந்தார்.

இனி, கடவுள் உண்மைக்கு எடுத்துக் காட்டிய உவமைச் சிறப்பு சாலச் சிறந்தது.

உலகத்துள்ள சகல எழுத்துக்களும் அகரமாகிய எழுத்து ஒன்றினையே தமக்கு முதலெழுத்தாகக் கொண்டனபோல், நிலையிற் பொருளும், இயங்கியற் பொருளுமாகிய உயிர்களைக் கொண்ட வுலகமும் கடவுளாகிய ஒரு முதலை தனக்கு முதலாகக் கொண்டுள்ளது என விளக்கினர். அகர உவமையால் இறைவன் உயிர்களை இயக்குந் தன்மையும் தான் எவ்வுயிர்களிலும் நீக்கமறக் கலந்திருந்தும் தான் பற்றற்ற தன்மை வாய்ந்தவன் என்பதும் பெறப்பட வில்லையா? எங்ஙனம்? அகரம் தன்னை யொழிந்த எழுத்துகளையும், ஏனைய மெய்யெழுத்துகளையும் இயக்கியும், தானே இயங்கியும், பிறக்கும் இயல்பால் தலைமை வகித்தும் விளங்கவில்லையா? இதனால் இறைவனே என்றும் உலகிற்கு முதல்வனென்பதும், உயிர்களெல்லாம் அவன் வடிவமென்பதும், "அவனன்றி ஓரணுவும் அசையா" தென்பதுமாகிய உண்மைக் கொள்கைகளைக் கொண்ட பண்டைய சமய நூல்கள் நம் நாயனார்க்கு உடன்பாடென்றே கொள்ளக் கிடக்கிறது.

"விற்பிரம்பாலுற்ற வடுமேவ வுலகெங்கு நிறை
சிற்பரனே தெய்வஞ் சிவசிவா—சொற்ற
அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

"கையுங் காலும் நிமிர்த்துக் கடாசநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐயநாவழித்தாளுக்கு அங்காந்திட
வையமேழும் கண்டாள் பிள்ளைவாயுளே,"

என்பன போன்ற சுவானுபூதிச் செல்வர்கள் கூறிப்போந்த சீரிய கொள்கைகளே நம் நாயனாருடையனவும் என்பதில் ஐயப்பாடென்னை?

N30.2.9

அம்மட்டோடு அமையாது, நம் வள்ளுவனார் மக்கட் பிறப்பாலாய பயன் இறைவனது திருவடிகளைத் தொழுதலே என்று தொழுதலின் அவசியத்தையும் வற்புறுத்தி யிருக்கிறார். "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின்" என்ற திருக்குறள் இதனை வலியுறுத்த எழுந்ததன்றோ?

"எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன், எம்பெருமான்!
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" என்னும் மணிவாசகப் பெருமான் திருவாக்கு மேற்கூறிய குறட்கருத்தைத் தழுவியதன்றோ? "நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்ற அப்பர் பெருமான் திருவாக்கின் கருத்து "மலர்மிசை யேகினான்" என்ற குறளடி கருத்தோடு மாறுபட்டதாமோ? இவ்வாறாகவே, ஒவ்வொன்றையும் கூர்ந்து ஆராய்ந்தால் இந்துமத சமூகப் பொதுக் கொள்கைகள் யாவும் நாயனாருக்கு உடன்பாடென்றே காட்டல் கூடும்.

இனி முக்கியமாய், வழிபாட்டு முறையை ஆராயப்புகின், இறைவனது உருவ வழிபாடும் மக்கட்கு இன்றியமையாததென நாயனாரும் கருதினாரென்றே கொள்ளக் கிடக்கிறது. இறைவன் ஞான சொரூபியாயிருப்பினும், ஆன்மாக்கள் தன்னை இலேசில் வழிபட்டுய்தற் பொருட்டு, கருணைமேலீட்டால் தானே உருவத்திருமேனி கொண்டு விளங்குகிறார் என்பதும், அத்தகைய பரம கருணாநிதியினது திருவடிகளை வணங்கித் துதித்தலே மக்கட்குப் பெரும்பேறென்பதும், பிறவிக்கடலைக் கடக்க அதுவே புணையாமென்பதும், இந்துமதக் கொள்கைகளின் அடிப்படையாகும். இதை ஆதரித்துப் பேசாத பெரியார் ஒருவருமிலர். இதைத் துணைக்கொண்டே எண்ணிலா பக்த சிரோமணிகள் பேறடைந்ததாகப் பெருநூல்கள் முழங்கும். நூல் முழக்கேயன்றி தற்பொழுதும் இத்துணை நம்பிக்கை கொண்டு வழிபட்டுய்ந்தாரையும் கண்கூடாகக் காணலாம். இக்கொள்கையை நம் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்துக் குறட்பாக்களில் நன்கு விளக்கி யிருக்கின்றார். அன்றியும், மனக்கவலை யொழியவும், பிறவி நீங்கவும், வீடடையவும் அதுவே சாதனம் என்று வற்புறுத்துகிறார். "தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது," "அறவாழி யந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால் பிறவாழி நீந்தலரிது," "வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கு யாண்டு



மிடும்பையில"; "மலர் மிசையேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்" என்பனவாதி குறட்பாக்களால் இதன் உண்மையறியலாம். மேலும், நல்வினையாலாவது அழிந்துபடும் சுவர்க்காதி போகமேயாகலின், அதுதானும் பிறவியை யொழித்து வீட்டுப்பேற்றைத் தருவதன்றெனவும், இறைவன் திருவடியடைந்து அவன் புகழினைப் புரிதலே தக்கசாதனமென்றும் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு."

இக்குறள் மேற்கூறியதை விளக்கவன்றோ எழுந்ததாகும்? தலையாதி அங்கங்கள் இறைவன் வழிபாட்டுக்கே அளிக்கப்பட்டன வென்றும், அப்பணியியற்றா அங்கங்கள் சிறந்தவையாகா வென்றும் கருதிய சமயப் பெரியார் கொள்கையை வள்ளுவனார் முற்றிலும் கொண்டாரென்பது தவறாகாது. "தலையே நீ வணங்காய்" என்ற தொடக்கத்துத் திருவங்கமாலையை யுபதேசித்தருளிய நாவுக்கரசரின் கொள்கையும், "கண்ணுதல் ஆலயம் நோக்கும் கண்களே கண்கள், கறைக்கண்டன் கோயில் புகுங் கால்களே கால்கள், பெண்ணொரு பாகனைப் பணியுந் தலைகளே தலைகள், பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள், பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே நன்னா, பரன் சரிதையே கேட்கப்படும் செவியே செவிகள், அண்ணல் பொலங்கழல் நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம், அவனடிக்கீழ் அடிமை புகும் அடிமையே அடிமை" யெனக் கூறிய ஆன்றோர் கொள்கையும் பின் வரும் திருக்குறளில் குறித்திருப்பதை உய்த்துணர்க.

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."

இதில் இறைவன் தாள்களை வணங்காத் தலைகள் [illegible] புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போல பயன்படுதலுடையன வல்ல" என்று விளக்கி யிருக்கும் அழுத்தமான கருத்தை உற்று நோக்குவார்க்கு நாயனாரது உருவ வழிபாட்டின் நம்பிக்கை புலப்படாமற் போகாது. "காணாத கண் முதலியன போல வணங்காத் தலைகள் பயனில வெனத் தலைமேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும் இமைபற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில வென்பது உங்கொள்க" என்ற பரிமேலழகியாரது விசேட உரையும் ஈண்டு கருதற்பாலது. உயிர்கள் யாவும் உய்தற் பொருட்டாக, தேவர்கள் விஷயமாக நித்தியபூசை, விழா முதலியன இயற்றுதலவசிய மென்

பது இந்துமதக் கொள்கைகளுள் ஒன்றுமென்பது ஆன்றோர் அறிந்த விடயமே. இதை வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் "சிறப்பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" என்னும் குறளில் குறிப்பிக்கிறார். அவர் கூறி வரும் முறையில் ஆராயின், நித்திய பூசை நைமித்தமாகிய விழாக்கள் முதலியனவும் அவருக்கு உடன்பாடென்றே காணக் கிடக்கிறது. அவை அனாவசியமென்றாவது, பயன் விளைவிக்காத காரியமென்றாவது அவர் கருதினாராகக் கொள்ள இடமில்லை.

இனி பண்டைய இந்துமத இதிகாசாதி சிறந்த நூலுண்மைகளை அறவே நம்பாமல் மறுத்தொழித்தார் என்று கூறவும் இடமில்லை. நீத்தார் பெருமை கூறவந்தவர், பஞ்சேந்திரிய நிக்ரஹம் செய்தவன், அதாவது புலன்களிற் செல்கின்ற அவா ஐந்தினையும் அடக்கினவன், மிக்க வலியுள்ளவன் என்றும், எத்துணைச் செல்வம், வலிபெற்றிருப்பினும் ஐந்தடக்கும் ஆற்றல் அற்றவன் வலியற்றவனே யென்றும் சொல்லி, அவ்விதப் புலனடக்கமே நீத்தார் பெருமைக்கு முக்கிய அறிகுறி யென்று விளக்கி, அதற்கு உதாரணமும் காட்டினர். ஐந்தடக்கியவன் எதையும் செய்யும் ஆற்றலுடையவனென்பதற்கு இந்திரனை ஆயிரங்கண்பெறச் சபித்த "கௌதமனையும்" கேவலம் புலன்வழிச் செல்லும் அவா அடக்கலாற்றாதவன் தன்பால் தங்கும் சக்தியற்றவனென்பதற்கு "சதமகன்" என்னும் பேர் வாய்ந்ததும் பல்கோடி போகம் ஓயாது துய்த்தும் அகலிகைபால் கொண்ட ஆசையை அடக்கா நிலைமையினால் ஆயிரங்கண் பெற்ற இந்திரனையும் உதாரணமாக்கினர். இதனை, பொய்யில் புலவர் அகலிகையின் சம்பந்தமான இக்கதையை நம்பினாரெனக் கொள்வதா? அன்றெனக் கொள்வதா? தனக்கு நம்பிக்கையில்லாத விடயத்தையும் தான் கூறவந்த அரும்பொருள் விளக்கத்திற்கு எடுத்துக்காட்டாக ஆள்வரோ? ஒருக்காலும் ஆளார் என்பதே துணிபு.

இது காறுங் கூறியவற்றால் கடவுள் ஒருவர் உண்டென்பதும், அவரை வழிபடுவதலே அழிவில்லாப் பேறடைவதற்கு இன்றியமையாச் சாதனமென்பதும், கடவுளது உருவ வழிபாடும் அவசியமாமென்பதும், பண்டைய நூற்கருத்துக்கள் பயனற்றவை யென்றும், பொய்யானவை யென்றும் கூறுவது ஆதாரமற்றதாமென்பதும் இக்கொள்கை ஒவ்வொன்றும் குறளாசிரியருக்கு உடன்பாடாமென்பதும் பெறப்பட்ட படியால், நாம் ஒவ்வொருவரும் அக்கடவுளை வழி



# வித்யானந்த வெளியீடு.

## காந்தியடிகள் இறுதிக் கடிதம்.

### இராஜப்பிரதிநிதிக்கு விடுக்கப் பட்டது.

அன்புள்ள நண்பரே!

எந்த இயக்கத்தைத் தொடங்கி அதன் பொறுப்பை ஏற்றுக் கொள்ளப் பல ஆண்டுகளாக நான் தயங்கிக் கொண்டிருந்தேனோ, அந்த இயக்கத்தை, அதாவது சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன்னர், அதனைத் தொடங்காமலிருக்க ஏதேனும் வழியுண்டா என்று யோசிக்கத் தங்களை நெருங்க அவாவுகிறேன். என்னுடைய சொந்த நம்பிக்கை தெளிவாகவே இருக்கிறது. உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் எந்த உயிருக்கும் நான் வேண்டுமென்றே ஊறு நிகழ்த்த மாட்டேன். அப்படியிருக்க, என்னுடைய சகோதர மக்களை, அவர்கள் எனக்கும் என்னுடையனவற்றிற்கும் எத்தகைய பெருந்தீங்கிழைத்த போதிலும் அவர்களை வேண்டுமென்றே புண்படுத்த மாட்டேன். இந்தியாவில் நடைபெறும் பிரிட்டிஷ் ஆட்சியை நான் ஒரு சாபமாகக் கருதிய போதிலும், உலகத்திலுள்ள மற்ற ஜனங்களைக் காட்டிலும், ஆங்கிலேயர்கள் பொதுவில் கேவலமானவர்கள் என்று நான் கருதவில்லை. ஆங்கிலேயரிற் பலர் எனக்குக் கெழுதகை நண்பரா யிருக்கின்றனர். ஆங்கிலேயரிற் சிலர் வெளிப்படையாகவும், தைரியமாகவும், தங்கள் ஆட்சி முறையிலுள்ள தீங்குகளை எடுத்து எழுதி யிருக்கின்றனர். அவைகளின் மூலமாகவே பிரிட்டிஷ் ஆட்சி முறையிலுள்ள பல தீங்குகளை நான் கற்றுக் கொண்டேன். பிரிட்டிஷ் ஆட்சியை நான் ஏன் ஒரு சாபமாகக் கருதுகிறேன்? படிப்படியாகச் சுரண்டிச் செல்லும் முறையை அநுஷ்டிப்பதாலும், தேசத்தினரால் தாங்க முடியாத சிவில், இராணுவச் செலவுகளை அதிகப்படுத்தி வைத்திருப்பதாலும், அந்த ஆட்சி முறை, வாயில்லாப் பூச்சிகளான இலட்சக் கணக்கான இந்தியர்களை வறுமைக்குள்ளாக்கி யிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி, அரசியல் விஷயத்தில் எங்களை அடிமைகளாக்கி விட்டது; எங்கள் கலைஞானத்தின் மூலாதாரத்தை யெல்லாம் உறிஞ்சி விட்டது; இந்தியர்களை நிராயுத பாணிகளாக்கி வைக்கும் முறையை அநுஷ்

டிப்பதனால் எங்களைப் பாரமார்த்திக வழியிலும் தாழ்த்தி விட்டது. ஆன்மசக்தி இல்லாமையால், கோழைத்தனமான, நிர்க்கதியான நிலைக்கு நாங்கள் கொண்டு வரப்பட்டு விட்டோம்.

### டெல்லி சம்பாஷணை.

இனிக் கூடப்போவதாகச் சொல்லப் படும் சர்வ கட்சி மகா நாட்டினால், இவைகளுக்கு ஒரு பரிகாரம் ஏற்படும் என்று என் நாட்டார் நம்பியது போல் நானும் நம்பியிருந்தேன். ஆனால், பூரண குடியேற்ற நாட்டந்தஸ்து திட்டத்தை ஆதரிப்பதாக நீங்களோ பிரிட்டிஷ் அரசாங்கத்தாரோ உறுதி மொழி கொடுக்க முடியதென்று கூறி விட்ட பிறகு, சர்வ கட்சி மகா நாட்டினால் எவ்விதபரிகாரமும் ஏற்படாதென்று தெரிந்து விட்டது. இவ்விஷயத்தில், பார்லிமெண்டின் அனுமதி வேண்டு மென்று கூறுவதற்கு மில்லை. பார்லிமெண்ட் தீர்ப்பை எதிர் பார்த்து, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் குறிப்பிட்ட ஒரு கொள்கையை அநுசரித்து வந்திருப்பதற்கு உதாரணங்கள் இல்லாமற் போகவில்லை. டெல்லியில் நாம் நடத்திய சம்பாஷணையினால் பயன் விளையாமற் போனதால், 1928-ம் ஆண்டு கல்கத்தா காங்கிரசில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை நடைமுறையில் கொணர்வதைத் தவிர, பண்டித மோதிலால் நேருவுக்கும் எனக்கும் வேறு வழியில்லை. உங்கள் (31-10-29) அறிக்கையில் குறிப்பிடப் பட்ட குடியேற்ற நாட்டந்தஸ்து என்ற சொற்றொடருக்கு, அதற்கு இயற்கையாயுள்ள பொருள் கொடுக்கப் பட்டால், சுயேச்சைத் தீர்மானத்தைக் கண்டு எவரும் திடுக்குற வேண்டுவதில்லை. ஏனெனில் பொறுப்புள்ள பிரிட்டிஷ் இராஜதந்திரிகள், குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்றால் பூரண சுதந்திரம் என்றே கூறியிருக்க வில்லையா? ஆனால், இந்தியாவுக்கு அத்தகைய சுதந்திரமுள்ள குடியேற்ற நாட்டந்தஸ்தை உடனே கொடுக்க வேண்டுமென்ற உத்தேசமே இல்லை.

### பிரிட்டிஷார் கொள்கை.

இவை யெல்லாம் பழங் கதைகளாகும். உங்கள் அறிக்கைக்குப் பிறகு, பிரிட்டிஷாருடைய கொள்கையை வெளிப் படுத்தக் கூடிய பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தியாவில் பிரிட்டன் செய்யும் வியாபாரத்தைப் பாதிக்கக் கூடியவாறும், இந்தியாவில் பிரிட்டன் நடத்திக் கொண்டிருக்கும் லேவாதேவிகளைப் பட்சபாதமில்லாத ஒரு விசாரணை நடத்துவதற்கு அவசியமா யிருக்கக் கூடியவாறும், பிரிட்டிஷ் கொள்கைகள் மாற்றப் படுவதை பொறுப்புள்ள பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் விரும்ப வில்லை யென்பது தெளிவாகிறது. இந்தியாவைச் சுரண்டும் முறை நிறுத்தப்படா விட்டால், இந்தியாவின் இரத்தத்தை இன்னும் அதிக வேகமாக உறிஞ்ச வேண்டும். பதினெட்டு பென்ஸ் நாணய மாற்று விகிதம், தீர்மானிக்கப் பட்ட விஷயமென்று இந்தியா அரசாங்கத்து வரவு செலவு அங்கத்தினர் கருதுகிறார். இந்த ஒரு தீர்மானத்தின் பயனாக, இந்தியா பலகோடி ரூபாய்களை இழக்க வேண்டி யிருக்கிறது. இந்த ஏற்பாட்டையும் வேறு பலவற்றையும் நிலை குலைக்க நேரடியான சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்க பலமான முயற்சிகள் நடைபெற்றால், இந்தியாவைத் தவிடு பொடியாக்கிக் கொண்டிருக்கும் ‘ஒழுங்கு’ என்பதன் பெயரால் அந்த முயற்சிகளைத் தகைய வேண்டுமென்று பணக்காரர்களை நோக்கி நீங்கள் விண்ணப்பித்துக் கொள்ளாமலிருக்க முடியாது. தேசத்தின் பெயரால் தொண்டு செய்வோர் சுயேச்சை விரும்புவதின் அடிப்படையான கருத்தைத் தெரிந்து கொள்ளாமலும், அதைப் பிறருக்குத் தெரிவியாமலும் இருந்தால், யார் பொருட்டு நாம் சுதந்திரம் வேண்டுகிறோமோ, யார் பொருட்டு அதை நிலைநிறுத்திக் கொள்வது அவசியமோ அந்த இலட்சக்கணக்கான ஏழை மக்களுக்கு, அச்சுதந்திரம் பயன் பெறாது. இதனாலேயே சுயேச்சை என்றால் எப்படியிருக்க வேண்டு மென்பதைப் பற்றிப் பொது ஜனங்களுக்குத் தெளிவித்துக் கொண்டு வருகிறேன்.



### நிலவரி முதலியன.

இந்தியா அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் நிலவரியே பெரும்பாகமா யிருக்கிறது. சுயேச்சை பெற்ற இந்தியாவில் இந்த நிலவரி முறை அடியோடு மாறுதலடைய வேண்டும். சாசுவத நிலத்தீர்வை, பெரிய ஜமீன்தார்களுக்கே யன்றிக் குடியானவர்களுக்கு நன்மை பயப்பதில்லை. குடியானவர் எப்பொழுதும் போல் உதவியற்றவராகவே இருக்கின்றனர். நிலச்செந்தக்காரர்களின் இஷ்டப்படி நடத்தப்படக் கூடியவர்களாவே அவர்கள் இருக்கிறார்கள். நிலவரி பெரிதும் குறைக்கப்பட வேண்டும்; குடியானவர்களுடைய நன்மையைக் கவனிக்கக்கூடிய விதமாக நிலவரி முறை அமைக்கப்பட வேண்டும். ஆனால் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் முறையானது,

குடியானவர்களின் ஜீவசத்தையே எடுத்து விடக் கூடியதாக விருக்கிறது. அவர்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாததாகவுள்ள உப்புக்குக்கூட வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவர்களுக்குத் தாங்கமுடியாத சுமை ஏற்பட்டிருக்கிறது. எவ்வித நிர்த்தாட்சண்யமும் பட்சபாதமுமின்றி உப்பு வரி விதிக்கப் படுவதால், அஃது ஏழை மக்களுக்கு அதிக பளுவைத் தருவதாயிருக்கிறது. பணக்காரர்களை விட ஏழைகளே அதிக உப்பு தின்னவேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்பதை நாம் நினைக்கும் போது, இந்த உப்பு வரியின் சுமை நன்கு புலனாகும். தனி முறையிலும், பொதுப்படையாகவும் கவனித்தால், மதுபான வரும்படியும், போதைவஸ்துக்கள் மூலமாகக் கிடைக்கும் வரும்படியும் ஏழைகளிடத்திலிருந்தே கிடைக்கின்றன. ஏழை மக்களின் தேகாரோக்கியத்தையும், அவர்களுடைய ஒழுக்கத்தையும் இவை உறிஞ்சி விடுகின்றன. இந்த மதுபானத்தையும், போதை வஸ்துக்களையும் ஏழைகளிடமிருந்து மறைப்பது, அவர்களுடைய தனிப்பட்ட சுதந்திரத்தைக் கட்டுப் படுத்துவதாகும் என்று சொல்லப் பட்ட போதிலும், உண்மையில் வரும்படிக்காகவே அவை நிலை பெற்றிருக்கின்றன. 1919-ம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டத்தை ஏற்படுத்தியவர்கள், மிகத் தந்திரமாக, இந்தக் கலால் இலாகா வருமானத்தை, இரட்டையாட்சியில் பொறுப்பு வாய்ந்தவராகக் கூறப்படும் மந்திரிமார்கள் வசத்தில் ஒப்புவித்து விட்டார்கள். இதனால், மதுவிலக்குப் பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டு விட்டது. அதனால், தொடக்கத்திலிருந்தே அவர்களால் நன்மைசெய்ய முடியாமல் செய்து விடப்பட்டது. துரதிருஷ்டமுள்ள ஒரு மந்திரி, கலால் இலாகா வருமானத்தைக் குறைத்துவிட்டால், கல்வி இலாகாவைப் பட்டினி போட வேண்டும். தற்போதைய நிலையில்காலால் இலாக வருமானம் குறைந்து போனால், அதனை ஈடு செய்ய,வேறு வழியில்லை. ஏழை மக்களை, வரிச்சுமை மேலே இருந்துஅமுக்கிக் கொண்டிருக்கிறதோடு, பணத்தை உற்பத்தி செய்வதற்கு ஆதாரமாயுள்ள கைராட்டினத் தொழிலும் அழிக்கப் பட்டுவிட்டது.

## அதிக செலவோடு கூடிய நிருவாக முறை.

இந்தியாவின் பெயரால் வாங்கப் பட்டிருக்கும் கடன்களைப் பற்றிய வரலாற்றைப்பற்றிக் கூறாமல், இந்தியாவின் அழிவு வரலாற்றை முடித்து விட முடியாது. இதைப்பற்றிப் பத்திரிகைகளிலும், பொது மேடைகளிலும் போதியவளவு கூறப்பட்டிருக்கிறது. இக்கடன்களைப்



பற்றிய பரிசீலனையை நடத்தும் பட்சபாதமற்ற ஒரு நீதி ஸ்தலத்தார், எவை எவை அநியாயமானவை என்று கூறுகின்றனரோ அவைகளை நிராகரிப்பது, சுயேச்சை இந்தியாவின் கடமையாயிருக்கும். உலகத்திலே அதிகச் செலவுசெய்து நடத்தி வரப்படும் அந்நிய நிருவாக முறையை நிருவகிப்பதற்காகவே, மேலே கூறப்பட்ட மாதிரி நடத்தி வரப்படுகிறது. உதாரணமாக உங்களுடைய சம்பளத்தையே எடுத்துக் கொள்ளுங்கள்: மாதம் இருபத்தோராயிரம் ரூபா உங்களுக்குக் கிடைக்கிறது. இதைத் தவிர வேறு விதமான வருமானங்களும் இருக்கின்றன. பிரிட்டிஷ் பிரதம மந்திரியோ, வருஷத்தில் ஐயாயிரம் பவுன் சம்பளமாகப் பெறுகிறார். அதாவது தற்போதைய நாணயமாற்று விகிதத்தின்படி மாதம் ஐயாயிரத்து நானூறு ரூபாய் ஆகிறது. இந்தியர்களின் சராசரி வரும்படி இரண்டணா. ஆனால் உங்களுடைய தினசரி வரும்படி எழுநூறு ரூபா. கிரேட்பிரிட்டனிலுள்ள ஜனங்களின் சராசரி தினவரும்படி இரண்டு ரூபாய். ஆனால் பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் தினசரி வரும்படி நூற்றெண்பது ரூபா. இந்தியர்களுடைய சராசரி வரும்படியைக் காட்டிலும் நீங்கள் ஐயாயிரம் மடங்கு அதிகமாகப் பெறுகிறீர்கள். பிரிட்டிஷ் பிரதம மந்திரியோ, பிரிட்டிஷாருடைய சராசரி வரும்படியைக் காட்டிலும் தொண்ணூறு மடங்கு அதிகமாகப் பெறுகிறார். இந்த நிலையைக் குறித்துச் சிந்திக்குமாறு உங்களை முழந்தாளிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். விசனிக்கக் கூடிய இந்த உண்மை உங்கள் மனதில் பதியும் பொருட்டே, உங்களைப் பற்றிய உதாரணத்தையே இங்கு எடுத்துக் காட்டினேன். உங்களிடத்தில் எனக்கு நிரம்ப மரியாதைஉண்டு. உங்களுடைய மனதைப் புண்படுத்த வேண்டுமென்பது என் உத்தேசமில்லை. இப்பொழுது நீங்கள் பெறும் சம்பளம் உங்களுக்கு அநாவசியம் என்பது எனக்குத்தெரியும். உங்கள் சம்பளமனைத்தையும் நீங்கள் தருமத்தின் பொருட்டுச் செலவழித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இந்த ஏற்பாட்டுக்கு அடிப்படையாயுள்ள நிருவாகத் திட்டத்தை உடனே நாம் ரத்து செய்துவிடவேண்டும். இராஜப்பிரதிநிதியின் சம்பளத்தைப்பற்றிக் கூறிய வரலாறு, எல்லாநிருவாக உத்தியோகஸ்தர்களையும் பொறுத்ததாகும்.

## மாறுதலின் அவசியம்

நிலவரியைக் குறைக்க வேண்டுமானால், நிருவாகச் செலவையும் குறைக்க வேண்டும். அது குறைய வேண்டுமானால், அரசாங்க

முறையே மாற வேண்டும். சுயேச்சையின்றி அந்த மாற்றம் ஏற்படாது. அந்த மாற்றத்தை விரும்பியே 26-1-30-ல் நடைபெற்ற பூரண சுயேச்சைக் கொண்டாட்டத்தில் ஜனங்கள் ஆவலுடன் கலந்து கொண்டார்கள். தாங்க முடியாத சுமை சுமைக்கப்பட்டால் அதையே, ஜனங்கள் சுயேச்சை என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் அரசியல் கட்சிகள் எதுவும் இந்தியாவிலிருந்து கிடைக்கும் வருமானத்தை விட்டு விடச் சித்தமாயில்லை. இந்தியர்கள் ஒரே முகமாக எதிர்த்துக் கொண்டிருந்தும், கிரேட் பிரிட்டன் இந்த வருமானத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கிறது. இந்தியா, ஒரு சமூகமாக வாழ வேண்டுமானால், பட்டினியால் இந்தியர்கள் மடிவுறுவது நிற்க வேண்டுமானால், உடனே பரிகாரம் கிடைப்பதற்கு ஒரு வழி தேடியேயாக வேண்டும். இனிக் கூட்டப்படுவதாகச் சொல்லப்படும் சர்வகட்சி மகாநாடு ஒரு பரிகாரமாகாது. அது வாதத்தின் மூலமாகப் பரிகாரம் ஏற்படுத்தக் கூடிய விஷயமு மன்று. அப்படி வாதஞ்செய்தாலும், வாதஞ்செய்யாவிட்டாலும், கிரேட்பிரிட்டன் இந்தியாவில் தான் நடத்திவரும் வியாபாரத்தை நிலை நிறுத்திக்கொள்ள எல்லா சக்திகளையும் பிரயோகிக்கும். எனவே, மரணத்தினின்று மீள, இந்தியா ஒரு வித சக்தியை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இப்பொழுது பலாத்காரக் கட்சியானது, ஒழுங்கற்றதாகவும், பொருட்படுத்தக் கூடாததாகவு முள்ள ஒரு நிலையில் இருந்த போதிலும், அது வலுத்துக்கொண்டு வருகிறது. இந்தக் கட்சியினால், ஏழை மக்களுக்கு நன்மை உண்டாகா தென்பது என் நம்பிக்கை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒழுங்குபடுத்தப்பட்ட பலாத்காரத்தை அடக்க, அஹிம்சா தர்மமே சிறந்த தென்ற நம்பிக்கை எனக்கு நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. அஹிம்சா தர்மம், நன்றாக இயங்கக் கூடிய ஒரு சக்தியல்லவென்று சிலர் கூறுகின்றனர். பலாத்காரமற்ற சக்தியானது, பலனளிக்கக் கூடிய சக்தி யென்றே என்னுடைய சிறிய அநுபவம் கூறுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் பலாத்கார சக்திக்கும், வளர்ச்சியடைந்து வரும் பலாத்காரக் கட்சியின் சக்திக்கும் எதிராக என்னுடைய அஹிம்சா தர்ம சக்தியைப் பிரயோகிக்கத் தீர்மானித்திருக்கிறேன். அதனை நான் பிரயோகியாமல், சும்மா இருந்தால், மேற் கூறப்பட்ட இரண்டு சக்திகளையும் அபிவிருத்தி செய்வதாகும். அஹிம்சா தர்ம சக்தியில் எனக்குப் பூரணமான நம்பிக்கை இருக்கும்போது, இனியும் நான் காத்துக் கொண்டிருப்பது பாவமாகும்.



இந்தப் பலாத்கார மற்ற சக்தியானது, தற்போது, சட்ட மறுப்பு மூலமாக வெளியாக்கப் படும். சத்தியாக்கிரக ஆசிரம வாசிகளைப் பொறுத்த மட்டிலேயே, இப்பொழுது இந்த இயக்கம் தொடங்கும். பிறகு, ஒரு வரம்புக்குட்பட்ட இந்த இயக்கத்தில் சேர யாராருக்கு விருப்ப முண்டோ அவர்களையும் சேர்த்துக் கொள்ளப் படும். பலாத்கார சக்தியை நான் பிரயோகிக்கத் தொடங்கும் போது, சில பைத்தியக்காரத்தனமான ஆபத்துகளுக்குட்பட வேண்டுமென்பதை அறிவேன். ஆனால் ஆபத்துக்களின்றி, சத்தியத்திற்கு வெற்றி ஏற்படுவதில்லை. சில சமயங்களில் விபரீதமான ஆபத்துக்களும் ஏற்படக் கூடும். தன்னை விடப் புராதனமானதும், தன்னை விடக் குறைவான கலைஞானப் பயிற்சியைப் பெறாததுமான ஒரு தேசத்தை மற்றொரு தேசம் ஆண்டு வருமானால், அந்த ஆட்சி புரியும் தேசத்தை நம்வசப் படுத்துவதற்கு, பல ஆபத்துக்களையும் அநுபவிக்க வேண்டுவது சகஜமேயாகும். வசப்படுத்த வேண்டும் அல்லது நமது கொள்கைகளுக்குத் திருப்ப வேண்டுமென்ற சொற்றொடரை நான் வேண்டுமென்றே ஈண்டு பிரயோகஞ் செய்திருக்கிறேன். ஏனெனில், என்னுடைய அஹிம்சா தர்மத்தின் மூலமாக, பிரிட்டிஷாரை நம் வசப்படுத்தி, அவர்கள் இந்தியாவுக்கு இழைத்த தவறை உணரும்படி செய்ய வேண்டுமென்பதே என் நோக்கமாகும்.

## தீமைகள் ஒழிக்கப் பட வேண்டும்.

உங்களுடைய ஜனங்களுக்கு நான் தீங்கு செய்ய மாட்டேன். என் உறவினருக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்ற ஆவல் எப்படி எனக்கு இருக்கிறதோ அப்படியே உங்கள் ஜனங்களுக்கும் தொண்டு செய்ய வேண்டுமென்ற ஆவல் எனக்கு இருக்கிறது. உங்கள் ஜனங்களுக்கு நான் எப்பொழுதும் தொண்டு செய்து கொண்டிருந்ததாகவே கருதுகிறேன். 1919-ம் ஆண்டுவரை, நான் கண்மூடித் தனமாகவே தொண்டு செய்து கொண்டு வந்தேன். அதற்குப் பிறகு விழித்துக் கொண்டேன். பிறகு ஒத்துழையா இயக்கங் கண்டேன். ஏன்? பிரிட்டிஷாருக்குத் தொண்டு செய்யவே. என்னுடைய நெருங்கிய பந்துக்களிடத்தில் எந்த ஆயுதத்தைப் பிரயோகித்து வெற்றியடைந் திருக்கிறேனோ அதே ஆயுதத்தையே அப்பொழுது பிரிட்டிஷார் விஷயத்திலும் பிரயோகித்தேன். என் உறவினரிடத்தில் எனக்கு அன்பு இருப்பது போல் உங்கள் ஜனங்களிடத்திலும் எனக்கு அன்பு இருக்குமாகில், அதை நான் ஒளித்து

வைத்துக் கொண்டிருக்க முடியாது. என் பந்துக்கள் என்னைப் பல ஆண்டுகளாகச் சோதனை செய்த பிறகு என் உண்மை நிலையை எப்படி அறிந்து கொண்டார்களோ, அப்படியே உங்கள் ஜனங்களும் என் நிலையை அறிந்து கொள்வார்கள். நான் எதிர்பார்க்கிறபடி ஜனங்கள் என்னுடைய இயக்கத்தில் சேருவார்களாகில், அவர்கள் அநுபவிக்கும் கஷ்டங்களானது—அதற்குள் பிரிட்டிஷார் இணங்கிக் கொடுத்தாலன்றி—எத்தகைய கல்மனதையும் உருக்கிவிடும். மேலே கூறப்பட்ட மாதிரியான தீங்குகளைக்களையும் மாதிரியாகவே, சட்டமறுப்பு இயக்கம் தொடங்கப் படும். பிரிட்டிஷ் சம்பந்தம் ஏன் வேண்டாமென்று கூறுகிறோம்? மேற் கூறப்பட்ட தீங்குகள் ஒழிந்தால், சிநேக வழி சுலபமாகி விடுகிறது. சமரச பாவத்துடன் இருக்க, அப்பொழுது சந்தர்ப்பம் ஏற்படும். அப்பொழுது, பிரிட்டிஷார் இந்தியாவில் நடத்தி வரும் வியாபாரத்தில் ஆசை என்ற அமிசம் இல்லாமற் போனால், எங்களுடைய சுயேச்சையை அங்கீகரித்துக் கொள்ள உங்களுக்கு எவ்விதக் கஷ்டமும் இராது. ஆதலின் இந்தத் தீமைகளை ஒழிக்க நீங்கள் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மனிதசமூகத்தின் நன்மையை உத்தேசித்து, சம அந்தஸ்திலுள்ள இரு சமூகத்தார் சேர்ந்து ஆலோசிக்கக் கூடிய ஒரு மகாநாட்டைக் கூட்ட நீங்கள் வழி தேடுவீர்களென்று நம்புகிறேன்.

## உப்பு வரி.

இந்த நாட்டைப் பாதிக்கக் கூடியதாயுள்ள வகுப்புப் பூசல்களைப் பற்றி நீங்கள் அநாவசியமாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அரசியல் திட்டத்தைப் பற்றிக் கவனிக்க இந்தவகுப்பு விஷயங்களில் ஆராய்ச்சி அவசியம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் வகுப்புப் பிரச்னைகளுக்கு மேற்பட்டதான பெரிய விஷயங்கள் பல சிந்திக்கப் படுவதற்கு இருக்கின்றன. அந்தத் தீமைகளை நீங்கள் கவனியாமலிருந்து விட்டால், என்னுடைய இந்தக் கடிதம் உங்கள் மனதைத் தாக்கா விட்டால் இம்மாதம் பன்னிரண்டாந் தேதி, நான் என்னுடைய ஆசிரமத்திலுள்ள சகாக்களுடன், உப்புச் சட்டங்களை மீறி நடக்கப் போகிறேன். ஏழைகளின் நிலையிலிருந்து பார்க்கையில் இந்த உப்பு வரி மிக அநியாயமானதென்று நான் கருதுகிறேன். சுயேச்சை இயக்கம் பாமர ஜனங்களின் நன்மையை உத்தேசித்தே நிறுவப்பட்டதால் முதலில், இந்த உப்பு வரித் தீமையை ஒழிப்பது அவசியமாகு



ம். இவ்வளவு காலமாக உப்புச் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சர்வ உரிமை முறைக்கு நாம் இணங்கியிருந்ததே ஆச்சரியமாகும். என்னைக் கைது செய்வதன் மூலமாக, என் ஏற்பாடுகளை நீங்கள் கலைத்து விடலாம். எனக்குப் பின்னால் பத்தாயிரக் கணக்கான பேர், ஒழுங்கான முறையில் என் வேலையைத் தொடங்கி நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இவர், உப்புச் சட்டத்தை மீறி அதற்குரிய தண்டனைகளுக்குள்ளாவர் என்று எதிர்பார்க்கிறேன்.

என்னால் கூடுமான வரையில், உங்களுக்கு அநாவசியமான சங்கடத்தை உண்டு பண்ண வேண்டுமென்பது என் விருப்பமல்ல. என்னுடைய இந்தக் கடிதத்தில் ஏதேனும் பொருள் இருக்கிறதென்று நீங்கள் கருதினால், இவ்விஷயமாக என்னிடம் நீங்கள் ஏதேனும் பேச விரும்பினால், அதற்காக, இந்தக் கடிதத்தைப் பகிரங்கப் படுத்த வேண்டாமென்று நீங்கள் நினைத்தால், இந்தக் கடிதம் உங்களுக்குக் கிடைத்ததும் எனக்கு உடனே ஒரு தந்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுது, இந்தக் கடிதத்தை நான் வெளியிடாமல் நிறுத்திக் கொள்கிறேன். இந்தக் கடிதத்தில் கண்ட பொருளுக்கு நீங்கள் இசைய விரும்பவில்லையானால், என்னுடைய வழிபற்றி நான் சொல்வதைத் தடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். உங்களை அச்சுறுத்துவதற்காக இந்தக் கடிதம் எழுதப்பட்டதென்று நீங்கள் கருத வேண்டாம். சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன்னர் இக்கடிதத்தை எழுதுவது என் தெய்வீகக் கடமையாகும். இதனாலேயே இந்தியாவின் நியாயமான கோரிக்கையில் நம்பிக்கையுள்ளவரும், அஹிம்சா தர்மத்தில் முழு நம்பிக்கை கொண்டவரும், இந்தக் காரியத்திற்காகவே ஆண்டவனால் அனுப்பப்பட்டாரோ என்று நான் கருதும் படியானவருமான ஓர் ஆங்கிலேய வாலிப நண்பரிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்தனுப்புகிறேன்.

இங்ஙனம்: அன்புள்ள,

(ஒப்பம்)மோ. க. காந்தி.

## இராஜப் பிரதிநிதியின் விடை

காந்தியடிகளின் இறுதிக் கடிதத்திற்கு இராஜப்பிரதிநிதியின் அந்தரங்கக் காரியதரிசி 5-3-30 தேதியிட்டு அளித்துள்ள விடை வருமாறு:—

அன்புள்ள ஸ்ரீமான் காந்திக்கு,

தங்களுடைய 2-3-30 கடிதம் கிடைத்ததாக அங்கீகரித்துக் கொள்ளும்படி இராஜப் பிரதிநிதி கட்டளையிட்டிருக்கிறார். சட்டத்தை மீறுந்தன்மையதும், பொது ஜன அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதுமான நடவடிக்கைகளை நீங்கள் எடுத்துக் கொள்ளப்போவதைப் பற்றி அவர் விசனிக்கிறார்.

உண்மையான,

(ஒப்பம்) ஜி. கன்னிங்ஹாம்,

அந்தரங்கக் காரியதரிசி.

# போர் துவக்கம்.

ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜ கோபாலச்சாரியார் எழுதுகிறார்:—

மகாத்மா காந்தி சத்தியாக்கிரஹப் போர் தொடங்கி விட்டார். அவரை அரசாங்கத்தார் கைது செய்து விட்டார்களென்னும் செய்தி விரைவிலேயே நாம் எதிர்பார்க்கலாம். இந்த மகத்தான சம்பவம் நேரும் போது நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைக் குறித்து மகாஜனங்கள் அறிந்து கொள்ள விரும்புவார்கள். பின்வரும் யோசனைகளை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காந்தியடிகள் நமது பாரத நாட்டில் தோன்றியிருக்கும் புத்துயிரின் உருவமாக விளங்குகிறார். நமது நாட்டின் தருமத்துக்கும், வருங்கால தேசீய வாழ்வுக்கும் அவர் பிரதிநிதியாவார். ஆகலின் அவரைக் கைதியாக்கின செய்தியானது தேசமக்களின் ஆத்ம சக்தியென்னும் பெருந்தீயை மூட்டும் நெருப்புப் பொறியாதல் வேண்டும். அந்தச் செய்தி கிடைத்ததும், நாடெங்கும் எவ்விதத் தூண்டுதலுமில்லாமல் அடிகள் போதித்து வரும் தத்துவங்களுக்கிணங்கி ஒரு பெரிய எழுச்சி உண்டாக வேண்டும்.

## கடையை மூடுவோம்.

மகாத்மா கைதியான சமாசாரம் கிடைத்ததும் தேசமெங்குமுள்ள ஜனங்கள் எல்லாரும் உடனே தத்தம் தொழில்களை அன்று நிறுத்தி விரதமிருக்க வேண்டும். கடைகளை மூட வேண்டும். இப்பெரிய தர்ம யுத்தத்தில் நேரிடக் கூடிய எல்லாத் துன்பங்களையும் சந்தோஷத்துடன் சகித்துக் கொள்ள ஆற்றல் அளிக்குமாறு அரசர்க்கரசனாகிய சர்வேசுவரனைப் பிரார்த்திப்பதிலேயே அன்று முழுதும்



வேலை நிறுத்தம் செய்யும்படி யாரையும் கட்டாயப் படுத்தக் கூடாது. பிறரை வற்புறுத்திச் சொல்ல அன்று சுற்றித் திரியவுங் கூடாது. எல்லாருக்கும் சமாசாரம் தெரியும்படி செய்தால் அதுவே போதும். வேலை நிறுத்தம் செய்வதை அவரவர்களுடைய விருப்பத்துக்கே விட்டு விட வேண்டும். தேசபக்தியும், தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற உணர்ச்சியும் உள்ளவர்கள் தாங்களாகவே வேலை நிறுத்தம் செய்வார்கள். இந்த வேண்டுகோளை ஜனங்களிடம் முன்னதாகப் பரவச் செய்தால் போதுமானது. வேறு முயற்சி வேண்டியதில்லை.

அன்றைய தினம் வீணாக நடத்தும் களியாட்டங்கள் எல்லாவற்றையும் நிறுத்தி விட வேண்டும். ஜனங்களுக்குள் ஒற்றுமை உணர்ச்சியும், துன்பஞ்சகிக்கும் ஆற்றலையும் வளர்ப்பதற்கு அன்று ஒவ்வொருவரும் முயல வேண்டும். மதுபானக் கடைக்காரர்கள் கூட அன்றைய தினம் மற்றவர்களோடு சேர்ந்து தங்கள் வியாபாரத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்காக அரசாங்கத்தார் அவர்களுக்கு அபராதம் விதிக்க மாட்டார்கள். அப்படிச் செய்ய முற்பட்டாலும் அதை ஏற்றுக் கொள்ளலாம்.

சாயங்காலம் ஸ்திரீ புருஷர்கள் எல்லாரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கவும், தேச விடுதலைப் போருக்குப் பிரமாணம் ஏற்பதற்கும் தகுந்த இடமொன்றில் அனைவரும் கூட வேண்டும். அங்கு பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றினால் போதுமானது.

## தீர்மானம்.

"பிரிட்டிஷ் அரசாங்கம் சுய நலத்தை முன்னிட்டு இந்நாட்டின் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டு போகிறது. ஜனங்களின் ஆண்மையை அழித்து வருகிறது. ஏழைக் குடியானவர்கள் மீது தாங்க முடியாத வரிச்சுமையைச் சுமத்தியிருக்கிறது இப்படி வசூலிக்கும் பணத்தைக் கொண்டு தேசத்தின் வறுமை நிலைக்குப் பொருந்தாத அளவில் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுத்தும், இராணுவத்திற்காக ஏராளமான பணம் செலவிட்டும் வருகிறது. உண்மையான சுதந்திர ஆட்சியை உடனே ஸ்தாபிக்கவும் மறுத்து வருகிறது. இக்காரணங்களுக்காக...........................  .....................

வாசிகளாகிய நாங்கள் இந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கண்டனம் செய்கிறோம். கடவுள் துணையை எதிர்பார்த்து சத்தியாகிரஹத்தைக்

கைக்கொண்டு, பூரண சுயராஜ்யம் ஸ்தாபிப்போம் என்ற, எங்கள் பிரதிக்ஞையை மறுபடியும் உறுதி செய்கிறோம்.

இந்த நாட்டில் வாழும் ஆண்கள், பெண்கள் அனைவரும் ஆண்டவனையும் சத்தியத்தையும் நம்பி, நமது அருந்தலைவர் மகாத்மா காந்தியைப் பின்பற்றி, தங்களுக்கு ஆற்றல் உள்ள மட்டும் இந்தப் போரில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்."

இத்தீர்மானத்தைப் படித்து அனைவரையும் கை தூக்கிச் சம்மதம் தெரிவிக்கச் செய்த பின் தேசிய கீதம் பாடிக் கூட்டத்தை முடிவு செய்ய வேண்டும்.

## தூய்மை பெறுவோம்.

வேலை நிறுத்தம், பொதுக் கூட்டம் முதலியவை ஒரு புறமிருக்க, உலக சிரேஷ்டர் சிறை செல்லும் இச்சம்பவமானது நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ண வேண்டும். ஏதேனும் தீய வழக்கம் நம்மிடமிருந்தால், இரகசியக் குற்றம் எதற்கேனும் நாம் ஆளாகியிருந்தால், அன்று முதல் அதை விட்டு ஒழித்துத் தூய்மை பெறத் தீர்மானிப்போமாக. பரிசுத்த மூர்த்தியான காந்தியடிகளின் ஆத்ம சக்தி வெள்ளத்தில் அன்றைய தினம் குளித்து நம்மிடமுள்ள அழுக்கைப் போக்கிக் கொண்டு மேன்மை பெறுவோமாக.

## போரில் சேருவோம்.

சத்தியாகிரஹப் போரில் ஈடுபடுவதற்கு முன்னதாக நீங்கள் தீர்மானித்திரா விட்டால் மகாத்மா கைதியான செய்தி கிடைத்ததும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு உறுதி மொழியில் கையெழுத்திடுங்கள். உங்கள் மாகாணத்தில் எந்த விதமான சத்தியாகிரஹப் போர் நடத்தத் தீர்மானிக்கிறார்களோ அதில் நீங்கள் ஈடுபட வேண்டும். முதற்படையிலேயே உங்களை வந்து சேரும்படி சொல்லலாம். அல்லது உங்களைப் பின்னால் வரும்படியும் கோரலாம். ஆனால் எப்பொழுது அழைத்தாலும் உடனே புறப்படுவதற்குச் சித்தமாயிருக்க வேண்டும். இப்போரில் எல்லா வகைத் துன்பங்களையும் சகிப்பதற்குத் துணிந்து அன்றைய தினம் சத்தியாக்கிரஹ உறுதி மொழியில் கையெழுத்திட்டு அனுப்பி வையுங்கள். இவற்றில் எது செய்யப் போகிறீர்கள் ?



# எனது சாவகாச வேலை

வேண்டுகோள்

ஸ்ரீமான் வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி இயற்றியது.

(கல்லார்க்கும் கற்றவர்க்கும்-என்ற மெட்டு)

தெய்வவிசு வாசமெங்கும் சிறப்பதென்று முருகா!
திடமான தேசபக்தி பிறப்ப தென்று முருகா!
வைபவருக் கிரங்குமருள் நயப்ப தென்று முருகா!
நாடெங்குஞ் செழித்துநலம் பயப்ப தென்று முருகா!
மெய்ம்மறையி னெறியதனை விழைவதென்று முருகா!
வீரவை ராக்யமெங்குந் தழைவதென்று முருகா!
கைதவச்சே வகத்தொழிலைக் கடப்பதென்று முருகா!
கைத்தொழிலா மெய்த் தொழிலில் நடப்பதென்று முருகா!

தன்னயங்கொள் சின்னமதி யொழிவ தென்று முருகா!
சமரஸநல் ஞானமழை மொழிவதென்று முருகா!
அன்னை தந்தை தெய்வமெனல் அறிவதென்று முருகா!
அவலமகி தருங்கல்வி குறைவதென்று முருகா!
முன்னவரின் முறை கண்டு முயல்வதென்று முருகா!
மூலன்மூவா யிரந்தமிழும் பயில்வதென்று முருகா!
சின்னச்செய்யுட் குறளினுரை தெளிவதென்று முருகா!
தெள்ளுதமிழ்ப் புலமை யெங்கும் விளைவதென்று முருகா!

கடமையுணர்ந் துழைக்கும் நலங் காண்ப தென்று முருகா!
கற்றவரை மதிக்குங்கலன் பூண்பதென்று முருகா!
குடிமைகுலம் பிறப்புரிமை கொள்வதென்று முருகா!
கொடியபிறர் வழக்கமெல்லாந் தள்ளு தென்று முருகா!
மடமையெனும் பெரியபகை மாய்ப்ப தென்று முருகா!
மானம்பெரி தென்னுமெண்ணம் வாய்ப்ப தென்று முருகா!
கொடியிடையார்க் கானகல்வி கொடுப்ப தென்று முருகா!
கோழைத்தன மொழியும்வழி யடுப்ப தென்று முருகா!

பாலன்ப்ரஹ்லா தன் வழியில் நிற்பதென்று முருகா!
பார்த்தன் தநுர் வித்தையெல்லாங் கற்ப தென்று முருகா!
சீலமிக்க பீஷ்மர்பலர் திகழ்வதென்று முருகா!
சீச்சியெனு மேச்சொழிந்து மகிழ்வதென்று முருகா!

ஓலமிட்டுக் குறையிரத்த லொழிவதென்று முருகா!
ஒருமைகெட்டுப் பிதற்றுமதி அழிவதென்று முருகா!
ஆலமெனும் வறுமையென வலிவதென்று முருகா!
ஆண்டவநீ யரணெனக்கை குவிவதென்று முருகா!

பண்டைப் பகீரதன்முயற்சி பலிப்பதென்று முருகா!
பழிக்கஞ்சும் பரதன்குணம் நிலைப்பதென்று முருகா!
கொண்டற்கொடைக் கர்ணன்குணங் கொள்வதென்று முருகா!
கூசும்பெண்மை யொழிந்து மெய்ம்மை விள்வதென்று முருகா!
தண்டித்தடக் குங்கொள்கை தவிர்வதென்று முருகா!
தருமவிர தக்கொடிகள் அவிர்வதென்று முருகா!
பெண்டிர்கற்பின் கோங்குநலம் பெருவதென்று முருகா!
பேசரிய மெய்ஞ்ஞான முருவதென்று முருகா!

[இந்து நேசன்.]

22050

# வேளாள மித்திரன்.

வேளாள சமூக முன்னேற்றத்தையும் தேசிய அபிவிருத்தியையும் தழுவி வெளி வரும் தமிழ் மாத இதழ்.

## வேளாள மித்திரனில் வெளி வரும் விஷயங்கள்.

| | |
|---|---|
| சமூக சீர் திருத்தம். | மாதர் விடுதலை. |
| அயல் நாடுகளில் நம்மவா. | சுகாதாரம். |
| தேகப் பயிர்ச்சி. | மது விலக்கு. |
| ஆராய்ச்சி. | ஆசார சீர் திருத்தம். |
| சாரணர் இயக்கம். | தீண்டாமை விலக்கு. |
| அரசியல். | வியாபாரம். |
| விவசாயம். | சன்மார்க்க இயக்கம். |
| கிராம நிர்மாணம். | தொழிலாளர் இயக்கம். |

இப்பத்திரிக்கைக்கு விஷயம் எழுதும் அறிஞர்களில் சிலர்.

ஸ்ரீமான்கள் K. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L., திருநெல்வேலி.

" C. K. சுப்பிரமணிய முதலியார், B.A., வக்கீல், கோயமுத்தூர்.

" Dr. D. S. P. Raja, மதுக்கரை.

" சதாசிவ முதலியார், B.A., சீயாழி.

" பண்டிட் முத்துத் தாண்டவராயம் பிள்ளை, சீயாழி.

" V. ராமலிங்கம் பிள்ளை, நாமக்கல்

" C. R. நாராயணசாமி முதலியார், B.A., செங்கற்பட்டு.

" வல்லை பால சுப்பிரமணிய முதலியார், B.A., சென்னை.

" புன்னை வனநாத முதலியார், திருநெல்வேலி.

" பொன்மார் நடேச முதலியார், தமிழ் பண்டிதா,

வேளாள குல மக்களே. தமிழ் நாட்டு சகோதரர்களே. வெளி நாட்டு அன்பர்களே. சமூக சீர் திருத்தத்திற்காகவும், தேசிய முன்னேற்றத்திற்காகவும், வெளித் தோன்றும் இவ் வேளாள மித்திரனுக்கு உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

இத்தனை சிறப்புடன் உதயமாகும் வேளாள மித்திரனை அதிசயமாகவும், அன்புடனும் ஆதரிக்க வேண்டியது வேளாளர்கள் கடமையாகும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய வேண்டுமென்றால் வேளாள மித்ரனில் விளம்பரம் செய்யுங்கள்.

சந்தா விபரம்

உள்நாடு வருட சந்தா ரூ. 2. வெளிநாடு வருட சந்தா ரூ. 2—4

"வேளாள மித்திரன்" ஆபீஸ்,

மதுக்கரை P.O. கோயமுத்தூர் ஜில்லா

(Via)

## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

இல்வாழ்க்கையில் ஈடு பட்ட இருபாலர்க்கும்
இன்றியமையாத இன்ப நூல்.
இதன் விலை ரூபா 2.
இது வரை 17,000 பிரதிகள் விற்பனையா யிருக்கின்றன.

## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது.

சோப்புகள், மெழுகு வர்த்திகள், தீ குச்சிகள், வார்னீஷ்கள், பிஸ்கட்டுகள், பௌடர்கள், பல வித மருந்துகள், இன்னும் இது போன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்ட முள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்க வேண்டும். 300 பக்கம், எரோப்ளேன் ட்ரேட் மார்க உள்ளது.

இதன் விலை ரூபா 1-8-0.

## விகட விநோதக் கொத்துகள்.

இப்புஸ்தகத்தில் முதல் பக்கத்திலிருந்து கடைசி வரைக்குந் துண்டு விகடமாகவே யிருக்கும். ஒவ்வொரு பக்கத்துக்குக் குறைந்தது இரண்டு விகடப் படங்களாவது இருக்கும். சிரிப்பே அறியாத எப்பேர்ப்பட்ட வரும் இந்நூலில் உள்ள ஒரு விகடத்தைப் படித்து விட்டால் உடனே கொல்லென்று தம்மை யறியாமலே சிரிப்பார். இந்நூல உங்கள் கைவசம் இருந்தால் நீங்கள் எப்பொழுதும் ஆனந்தமா யிருப்பீர்கள்.

இதன் விலை அணா 10.

ஓயாச்சிரிப்பு ! ஓயாச்சிரிப்பு !

சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாய் விட்ட தென்று
ஒருவர் எழுதுகிறார்.

## முத்து மாமா.

என்ற விகட விநோதக் கதையை நீங்கள் படித்துப் பார்த்திருக்கிறீர்களா? இல்லா விட்டால் உடனே வாங்கிப் படியுங்கள். இதைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும் போது கூட சிரிப்பீர்கள். இதைப் போன்ற கதை தமிழில் இது வரையிலும் வெளி வந்ததே யில்லை.

வேண்டுவோர் 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
இதன் விலை அணா 4.

---

வேளாள மித்திரன் ஆபீஸ்,
மதுக்கரை போஸ்டு.
(Via) போத்தனூர் (கோயமுத்தூர் ஜில்லா).



·ine Press, Chingleput, and Edited and Publis...
...ania Mudaliar, at Mndukkarai, Coimbatore.